திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, புதிய மரபை உருவாக்கலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் முதலமைச்சர் சொன்னதைப் பற்றிக் கேட்கிறார். நேற்று அவர் எதிரிலேயே உட்கார்ந்திருந்தார், அப்பொழுதே எதிர்க் கட்சித் தலைவர் கேட்டிருக்கலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : அது அவைக் குறிப்பிலேயே இடம் பெறாது என்று கருதினோம். ஆனால், எல்லாப் பத்திரிகை களிலும் முதலமைச்சர் டேப் எடுத்துக் காட்டினார் என்ற செய்தி வந்துள்ளது. டேப் எடுத்துக் காட்டி விளாசினார் என்று ஆளுங் கட்சிப் பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது. அந்த விளாசல் என்ன என்பதை நாங்கள் பார்த்து விட வேண்டும். அதைப் போட்டுக் காட்டுங்கள். (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது, அங்கே பேசிய பேச்சுக்களுடைய, சொற்பொழிவுகளுடைய டேப்புகள் இருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். அந்த டேப்பிலே என்ன இருக்கிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பினால், தாங்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்யலாமே தவிர, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று ஒரு முறையை வகுக்க வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதனுடைய தொடர்பாக அல்ல. இங்கே, நம்முடைய ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும், திரு. நாஞ்சில் வின்செண்ட் அவர்களும், திரு. வெள்ளைச்சாமி அவர் களும், திரு உகம்சந்த் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்னையைத் தந்திருக்கிறார்கள். அது இதுவரையிலே எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று திரு. கிருஷ்ண மூர்த்திக்குக் கூறிய அதே விளக்கம்தான் உங்களுக்கும் தருகி றேன். உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் என்னுடைய உரிமை, ஏற்கனவே, இந்தச் சபையிலே பலமுறை அதைப் பற்றி தீர்ப்புகளை அளித்திருக் கிறேன். அது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை

1981 மார்ச 5] [பேரவைத் தலைவர்]

நான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறேன். அதை எடுத்துக்கொள் கிறேனா, இல்லையா என்பதைப் பற்றி என்னுடைய அறையிலே தான் கேட்க வேண்டுமே தவிர, இங்கே கேட்கக் கூடாது. (குறுக்கீடு) நேற்றைய தினம் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதற்காகத்தான் வெளி நடப்பு எல்லாம் செய்தார். தன்னுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை உடனே எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். உடனே எடுத்துக்கொள்ள முடியாது. எடுத்துக் கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் அவைத் தலைவருடைய உரிமைதான். அதை நான் விட்டுக் கொடுப்பதாக இல்லை. எனக்குச் சில உரிமைகள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் அதையும் விட்டுவிட்டு, இங்கே பேரவையை நடத்திச்செல்ல முடியாது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

போலியோ நோயினால் சென்னையில் குழந்தைகள் பாதிக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை நகரிலே கடந்த இரண்டு நாட்களிலே போலியோ நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்ட 17 குழந்தைகளில் 6 பேர்கள் இறந்து விட்டதாலும், மேலும் சிலர் அபாயகரமான நிலைமையிலே உள்ளதாலும் மக்கள் மத்தியிலே உள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. என். எஸ். வி. சித்தன், டாக்டர் கே. சௌரிராஜன், திரு. செ. இராமலிங்கம், திரு. சோ. அழகர்சாமி, திரு. இரா. கருப்பையா, திரு. மு. அப்பாதுரை, திரு. தி. கா. நல்லப்பன், திரு. செ. சிவசாமி, திரு. ப. பொன்னுரங்கம் ஆகியோர் தீர்மா னங்கள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கிய மானது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்

* திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே போலியோ நோய் தாக்கப்பட்டதால் கடந்த இரண்டு மாதங்களில் மட்டுமே அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட 330-க்கு மேற்பட்ட மழலைச் செல்வங்களிலே 40-க்கும் மேற்பட்ட கண்மணிகள் காலனின் கோரப் பசிக்கு ஆளாகி உள்ளன என்று "இந்து" போன்ற நாளேடுகளில் வந்துள்ள சோகச் செய்திகள் நெஞ்சை உலுக்குவதாக உள்ளன. இன்னும் வேதனை தரத்தக்க செய்தி என்னவென்றால், உயிர் பிரிந்த குழந்தைகளிலே, 10 செல்வங்கள் பிறந்து 1 வாரமே ஆகின்றன என்பதாகும்.

குழலையும் யாழையும் விட இனிய குரலைக் கேட்டு மகிழ்ந்த, அந்தப் பிஞ்சுகளை இழந்து தவிக்கின்ற பெற்றோர் உற்றாரி னுடைய சோகத்தை வார்த்தைகளாலே வடிக்கமுடியாது